**O.S.No.44/2013**

**Date:24.07.2018**

பிரதிவாதி தரப்பு சாட்சி 1 - போஜன், த-பெ.நடராஜன் பிள்ளை

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

(6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை)

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

என் சொந்த ஊர் எது என்றால் மதுரை ஆகும். என் நிருபண வாக்குமூலத்தில் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகா என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் தற்போது அந்த முகவரியில் இருக்கிறேன். நான் என்ன வேலை பார்த்துள்ளேன் என்றால் ஆர்.எம்.எஸ்.-ல் ஓட்டுநராகப் பணிபுரிந்தேன். எந்த மாவட்டத்தில் பணிபுரிந்தேன் என்றால் மதுரை மாவட்டத்தில் பணிபுரிந்தேன். நான் 31.05.2006ல் பணியிலிருந்து ஓய்வு பெற்றேன். என் மனைவி வேலைக்குச் செல்கிறாரா என்றால் இல்லை. என் சுய வருமானத்தின் பேரில்தான் என் மனைவி பெயரில் சொத்து வாங்கினேனன் என்றர்ல சரிதான். யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் ராஜு நாயுடு என்பவரிடமிருந்து வாங்கினேன். புல எண், விஸ்தீரணம் என்ன என்றால் சர்வே எண்.47-4, 60 செண்டு கிரயம் பெற்றேன். தற்போது வாதி எந்த புல எண்ணுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற தெரியுமா என்றால் தெரியாது. விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. என் நிருபண வாக்குமூலம் பத்தி 5ல் தாவாச் சொத்து மதுரை வடக்குத் தாலுகா, காதக்கிணறு கிராமத்தில் ரீசர்வே எண்.47-4, 60 செண்டில் கட்டுப்பட்டதாக கூறப்படுகிறது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் பத்திரத்தின்படி 60 செண்டு, பட்டாப்படி 48 செண்டு ஆகும். எனக்கு சொத்தின் நான்குமால் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. என் சொத்து தொடர்பாக அடங்கல், கிஸ்தி ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 1919, 1920, 1950க்குரிய தாய்ப்பத்திரம் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. என் மனைவி பெயரில்கிரையம் வாங்கிய தேதியில் தாவாச் சொத்தின் அனுபவத்தில் வாதி இருந்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் வாதி அனுபவத்தில் இல்லை. 5ம் பிரதிவாதி பற்றி தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணம் வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் ராஜுநாயுடு ஒரு தரப்பினர் என்று தெரியுமா என்றால் தெரியும். ராஜு நாயுடு வழக்கில் ஆஜராகி கட்சி செய்கிறாரா என்றால் தெரியாது. ராஜு நாயுடு சொத்தின் அனுபவத்தில்

இருந்துள்ளார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.47-6க்கு ரீசர்வே எண்.47-4 காணப்படவில்லை என்றால் சரியல்ல. என் மனைவி பெயரில் கிரையம் பெற்ற ஆவணத்தை நிரூபிப்பதற்க ராஜு நாயுடுவை விசாரிக்க தயாராக உள்ளோமா என்றால் இல்லை. தாவாச் சொத்திற்கு நடப்பு பசலிக்கு வாதிதான் அனுபவத்தில் இருந்து வரி செலுத்தி வருகிறார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 1919, 1920, 1950க்குரிய தாய்பத்திரத்தை நான் கிரயம் செய்து கொடுக்கும் போது செல்வத்திடம் ஒப்படை செய்து விட்டேனா என்றால் ஒப்படைத்து விட்டேன். நான் மதுரையில் சொத்து யார் மூலமாக கிரையம் பெற்றேன் என்றால் எனக்கு ஒரு புரோக்கா சொன்னார், வாங்கினேன். புரோக்கர் பெயர் தெரியுமா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. 5ம் பிரதிவாதியின் கம்பெனி ஒரு ரியல் எஸ்டேட் கம்பெனி என்றால் தெரியாது. என் மனைவி பெயரில் கிரையம் வாங்கும் போது கிரையச் சொத்து தொடர்பாக சட்டக்கருத்துரு பெற்றேனா என்றால் வில்லங்கம் போட்டு பார்த்து வாங்கினேன். மனைவி பெயரில் கிரையம் வாங்கும் போது வருவாய் ஆவணங்களை சரி பார்த்தேனா என்றால் சரி பார்க்கவில்லை. வா.சா.ஆ.12ன்படி சொத்துகிரயைம் வாங்கும் போது திண்டுக்கல் மாவட்டம் பட்டி வீரன்பட்டியில் கிரையம் வாங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.12ன் சொத்து விபரத்தில் யு.டி.ஆர்.பட்டா எண்.4351ல் யூ.டிஆர் படி சர்வே எண்47-4 என்றால் சரிதான்.